அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 189

இல. ரியு/27(கொள்கை)1
அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு-7.
1981, பெப்புருவரி மாதம் 26ஆந் தேதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
அரசயாக்கத் தலைவர்கள் யாவர்க்கும்.

1980, யூலை மாதத்தில் நடைபெற்ற
வேலைநிறுத்தம்-தொழிற் சமாசங்களுக்கு
அளிக்கப்பெற்ற வசதிகளைப் பிறக்கிடுதல்.

மேற்படி விடயம் பற்றிய 1980.07.29 ஆந் தேதியிட்ட 172 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையைப் பார்க்க.

02. குறித்த வேலை நிறுத்தத்திற் பங்குபற்றாதவர்களாகி, ஆனால் வேலை நிறுத்தத்திலீடுபட்ட தொழிற் சமாசங்களின் உறுப்பினர்களாக விளங்குபவர்களான அரசாங்க உத்தியோகத்தர்களிடமிருந்து தொழிற் சமாச ஒப்பப்பணத்தை அறவிடும்போது-

(அ) அரசாங்க உத்தியோகத்தர்களின் பதிவு செய்யப்பெற்ற தொழிற் சமாசங்களின் உறுப்பினர்களாகவுள்ளவர்களின் ஒப்பப்பணம் தன்னிச்சையாக அளிக்கப்படுகின்றதாயின், அவர்களின் சம்பளத் தொகுப்பிலிருந்து மாதாந்த ஒப்பப் பணம் அறவிடப்படுவதற்கு எவ்வித ஆட்சேபணையுமில்லை யெனவும்,

(ஆ) அவ்வாறு ஒப்பப்பணம் குறைக்கப்படுதல் தொடர்ந்து செய்யப்படவேண்டுமாவென்பது பற்றி ஒப்பப்பணக் குறைப் புக்குரியவர்களான தொழிற் சமாச உறுப்பினர்களிடமிருந்து விசாரித்தறியப்பட வேண்டுமெனவும்

அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

03. அதற்கிணங்க நடவடிக்கை எடுக்குக.

ஒப்பமிட்டவர்: டீ. பி. ஐ. பி. எஸ். சிறிவர்த்தன,
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு,

கீசி/